# <u>In the Court of the  District Munsif, Eraniel</u>

**Original Suit No. 71/2017** **Date:17.04.2026.**

**(DW1)- சுந்தரம்**

<u>வாதி தரப்பு  குறுக்கு  விசாரணை</u>

1. நான் குளச்சல் கிராமம், வாணியங்குடி அஞ்சல், பனைவிளையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளும் பனைவிளையை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல, சரஸ்வதிக்கு பனைவிளை கிடையாது அவர் தாவா சர்ச்சின் அருகில் குடியிருந்து வருகிறார். 2 ஆம் பிரதிவாதிக்கு பனைவிளை என்ற முகவரிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை சார்வு செய்யப்பட்டு அவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி பின் ஒரு தலைபட்சம் ஆக்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் தாவா சர்ச் அருகே தான் உள்ளது சர்ச் இருக்கும் இடம் மற்றும் அதை சுற்றியுள்ள இடத்தை பொதுவாக பனைவிளை என்று குறிப்பிடுவார்கள்.

2. பனைவிளையில் சி.எஸ்.ஐ மற்றும் ஆர்சி தேவாலையம் உள்ளது என்றால் சரியல்ல, சி.எஸ்.ஐ தேவாலையம் மட்டும் உள்ளது. தாவா சொத்து அமைந்துள்ள பகுதி பெயர் பண்டாரவிளை என்றால் சரிதான். பண்டாரவிளை மற்றும் பனைவிளை வெவ்வேறு ஊர்கள் என்றால் சரியல்ல, பனைவிளையில் உள்ள விளையின் பெயர் பண்டாரவிளை ஆகும். பண்டாரவிளை என்பது குளச்சலில் உள்ள தனி கிராமம் என்றாலும் பனைவிளை என்பதும் அதே போன்று தனி கிராமம் என்றால் சரியல்ல, அது ஒரு விளையின் பெயர் ஆகும். எங்கள் ஊர் இந்துகள் சார்ப்பில் ஒரு நிர்வாகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிர்வாக கூட்டம் எங்கு வைத்து நடைபெறும் என்றால் பனைவிளை அம்மன் கோவிலில் வைத்து நடைபெறும்.

3. பனைவிளை ஊர் நிர்வாகம் குறித்த ஆவணங்கள் உண்டு என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பண்டாரவிளையின் ஊர் மக்கள் விபரம் துலங்கும் என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அது நிர்வாகத்தில் உள்ளவர்கள் தான் தாக்கல் செய்ய முடியும். நான் குறிப்பிடுவது போல்  பண்டாரவிளை  ஊரை சார்ந்தவர்கள் மேற்படி நிர்வாகத்தில் உறுப்பினர் என்பதை காட்ட எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சர்ச் என்பதை காட்ட நான் ஏதேனும் எழுத்து பூர்வமான ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் கூகுள் மேப்பில் வாதியால் தாவா சொத்து சர்ச் என்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது மேலும் தாவா சொத்தில் பெயர் பலகை வைத்துள்ளார்.

4. மேற்படி ஆவணங்கள் தவிர எந்த ஆவணமும்  இல்லை என்றால் வேறு எந்த ஆவணமும்

பார்க்கவில்லை. நான் குறிப்பிடுவது போல் தாவா சொத்தில் சர்ச் என்று எந்த பலகையும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் சர்ச் என்று குறிப்பிடவில்லை என்றால் பெந்தேகோஸ் சபையினர் சர்ச் என்று பெயர் வைக்கமாட்டார்கள் துதி மையம் என்று தான் பெயர் வைப்பார்கள். நான் எனது எதிருரையில் மற்றும் நிரூபண வாக்மூலத்தில் சர்ச் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் வழக்கு பட்டிகை சொத்தில் சர்ச் என்று மற்றவர்கள் கூறுவதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் நான் துதி மையத்தை தான் சர்ச் என்று குறிப்பிட்டுள்ளேன். ஒவ்வொரு நபரும் அவரவர் வீட்டிற்கு அவர் இஷ்டப்படி பெயர் வைப்பார் என்றால் சரிதான், ஆனால் இல்லம் என்று வைப்பார்கள் துதி மையம் என்று வைப்பார்கள்.

5. வீட்டின் உரிமையாளர் அவர் சொத்திற்கு பெயர் வைப்பது அவர் இஷ்டம் என்றால் நான் இதுவரை துதி மையம் என்று வீட்டிற்கு பெயர் வைத்து பார்த்தது இல்லை. தாவா சொத்து ஒரு கிருஸ்தவ அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டது என்றாலும் எனவே அறக்கட்டளை சார்ப்பில் அறக்கட்டளை சம்பந்தபட்ட பெயர்கள் வைப்பார்கள் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் மத வழிபாடு நடப்பது குறித்து நான் நாளது தேதி வரை எந்த அதிகாரி இடமும் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வட்டாட்சியர் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை செய்தார். மேற்படி விபரத்தை நான் எனது நிரூபண வாக்மூலத்தில்லோ எதிருரையிலோ குறிப்பிடவில்லை என்றாலும் அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அது பற்றி தெரியாது.

6. வாதி மீது நாளது தேதிவரை எந்தவித குற்ற புகாரும் பதிவு செய்யப்படவில்லை என்றால் ஒரு இரு முறை புகார் பதிவானது அதன் அடிப்படையில் வட்டாட்சியர் பேச்சு வார்த்தை நடத்தினார். வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வழக்கு பதிவு செய்யப்பட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் மைக் செட் மற்றும் கூம்பு வடிவில் உள்ள ஒலிபெருக்கி அமைத்ததற்கு ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் புகார் கொடுக்கப்பட்டது அதன் அடிப்படையில் மேற்படி பொருட்களை காவல் துறையினர் எடுத்து சென்றனர். யார் புகார் கொடுத்தார் என்றால் ஊர் மக்கள் கொடுத்தார்கள் யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி எந்த ஒலிபெருக்கியும் வாதி வைக்கவில்லை என்றாலும் நான் குறிப்பிடுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தற்போது 500 மீட்டர் தூரத்தில் உள்ளேன் முன்பு 50 மீட்டர் தூரத்தில் இருந்தேன். வாதி வழிபாடு செய்வது குறித்து எனக்கு இடையூறு ஏற்படுவதாக நான் எனது எதிருரையிலோ நிரூபண வாக்மூலத்திலோ

குறிப்பிடவில்லை என்றால் எனக்கு எந்த இடையூறும் கிடையாது ஊர் பொது மக்களுக்கு இடையூறு இருந்தது அதற்கு தான் நானும் சென்றேன் அதன் அடிப்படையில் என் மீது வழக்கு தாக்கல் செய்துவிட்டனர். வழக்கு பட்டிகை சொத்தில் மத வழிபாடு நடப்பது குறித்து இந்து முன்னனி உறுபினர்கள் தாவா சொத்தில் இடையூறு செய்தார்கள் என்றால் சரியல்ல, வழிபாட்டிற்குதான் முதலில் ஊர் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து பின்பு மேற்படி இந்து முன்னனி கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மேற்படி இந்து முன்னனி கட்சியினர் பொய்யான காரணத்திற்காக ஆர்பாட்டம் செய்தனர் என்றாலும் அதற்கு நான் உறுதுனையாக இருந்தேன் என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**